Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை ரூபா: 5-00

## வடக்கு - கிழக்கு போருக்கு தினமும் நாலரைக் கோடி செலவு

சிறிலங்காவின் வரும் ஈனத்தில் ஐந்தில ஒரு பங்கு பாதுகாப்பு அமைச்சுக்கு மட்டுமே செலவிடப்படுகிறது. மொத்தம் 25 அமைச்சுக்கள் சிறிலங்காவில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. சிறிலங்கா இராணுவம் நாளொன்றுக்குச் சராசரியாக சுமார் நாலரைக் கோடி ரூபா செலவு செய்து பாரிய செலவேற்படும் யுத்தம் ஒன்றை நடாத்திக் கொண்டிருக்கின்றது. இந்திய - சிறிலங்கா ஒப்பந்தம் கைச்சாத்தாகி இந்தியப்படை நிலைகொண்ட 1987, 1988, 1989 ஆம் ஆண்டுகளில் சிறிலங்கா இராணுவத்தினது செலவு குறைந்து காணப்பட்டது. இந்தக் காலப் பகுதியிலுள்ள பெரும் இராணுவச் செலவுகளை இந்தியாவே பொறுத்துக் கொண்டது சமீப காலங்களில் வெளிநடுகள் [4 ஆம் பக்கம் பார்க்க]

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம்:- 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | வைகாசி 15 | ( 28 - 05 - 1992 ) | வியாழக்கிழமை | ஓசை: 109

# இந்தியாவின் கையாலாகாத்தனம் வெளியுறவுக் கொள்கை தோல்வி

## யாழ். அரச அதிபருக்கு ஜீப்வண்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் அலுவலகப் பாவனைக்காக அவருக்கு ஜீப் வண்டி ஒன்று வழங்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு தனக்கு வழங்கப்பட்டுள்ள ஜீப் வண்டியை தற்போது கொழும்பில் தங்கியிருக்கும் அரசாங்க அதிபர் திரு. பாணிக்கசேகர் இங்கு (4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் நாட்டில் 42 பேர் கைது

(கொழும்பு)

புலிகளுக்கு உதவினார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் சுமார் நாற்பத்தியிரண்டு தமிழகத்தவர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டிருப்பதாக 'ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## யாழ் மாவட்ட பா.உ.வுக்கு எதிராக நடவடிக்கை

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரான கே சீனிவாசனுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது பற்றி கூட்டணி வட்டாரங்கள் ஆராய்ந்து வருவதாகத் தெரிய வருகிறது கே.சீனிவாசன் ஏற்கனவே ஈ.என்.டி.எல்.எவ் இயக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டது தெரிந்ததே.

## விடுதலைப் புலிகள் மீதான தடை குறித்து 'டெய்லி டெலிகிராவ்' கண்டனம்

(டில்லி)

விடுதலைப் புலிகள் இயக்கம்மீதான தடை இந்திய அரசின் கையாலாகாத்தனத்தை எடுத்துக்காட்டுவதாக பிரபல இந்திய ஆங்கிலத் தினசரியான 'டெய்லி டெலிகிராப்' கண்டனம் தெரிவித்தது இலங்கை விவகாரத்தில் இந்தியா இனிமேல் ஆக்கபூர்வமான பங்கு எதையும் வகிக்க முடியாது என்பதையே இந் நடவடிக்கை எடுத்துக்காட்டுகிறது என இப் பத்திரிகை தனது ஆசிரிய தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பு மத்திய அரசு பலவீனம் அடைவதும், வடகிழக்கில் ஓரளவு சுதந்திரமான ஈழம் உருவாகுவதும் இந்தியாவின் நலன்களுக்கு சாதகமாக இருக்கப் போவதில்லை. அப்படியிருந்தும்; தனது குறுகிய கட்சி அரசியல் நலனைக் கருத்தில்கொண்டு சிறிலங்கா அரசை பலவீனப் படுத்துவதிலும் சீர்குலைப்பதிலும் இந்தியா பகீரத முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என இப் பத்திரிகை குற்றம் சாட்டியுள்ளது

''சிறிலங்காவில் அமைதி காக்கும் பணியை ஏற்றுக்கொண்டதில் இந்தியா எந்த கைய நன்மையை பெற்றுக்கொண்டது என்று ஒரு கேள்வியை எழுப்பினால், மிகவும் சொற்பமானது என்றே பதில் சொல்லலாம். ஒரு பிராந்திய பொலிஸ்காரன் என்ற அந்தஸ்தைப் பெற்றெடுக்கவேண்டும் என்ற அங்கலாய்ப்பில் இந்திய அரசு ராஜதந்திரத்துக்கு முறைக்குப் பதிலாக ஆயுத நெருக்கடிக்குள் சிக்கியது. இராணுவத் தலையீடானது ஆபத்தான இருக்கக்கூடிய ஆயுதம் போன்றது என்பதனை வியட்னாம், கம்போடியா, ஆப்கானிஸ்தான் யுத்த அனுபவங்களிலிருந்தாவது இந்தியா உணர்ந்திருக்க வேண்டும். இந்த தலையீடு வெற்றியில் முடிந்திருந்தால் உள்நாட்டில் அனுகூலம் ஏற்பட்டிருக்கலாம்' ஆனால் தோல்வி ஏற்படுமேயானால் அது பல தசாப்தங்களுக்கு வெளியுறவுக் கொள்கைக்கு பங்கம் ஏற்படுத்திவிடும்'' என்று இப் பத்திரிகை சுட்டிக்காட்டியது.

''இந்திய அமைதிப்படையானது யாழ்ப்பாணக் களத்தில் விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ள முடியவில்லை இதனால் இந்திய ஆயுதப் படைகளின் கௌரவத்திற்கு பெரும் இழுக்கைத் தேடிக் கொடுத்தது அத்துடன் ஜனாதிபதி பிரேமதாசாவும் கைவிட்டு விட்டது மேலும் அவமானமாகவே அமைந்தது இந்தப் பாரிய பின்னடைவுகளிலிருந்து இந்தியா இன்னும் மீட்சிபெறவில்லை இந்தச் சூழ்நிலையில் கடந்த வாரம் விடுதலைப் புலிகள் மீது தடை விதித்ததிலிருந்து இனிமேல் இந்தியா இலங்கை விவகாரத்தில் ஆக்கபூர்வமான எந்தப் பங்கையுமே வகிக்க முடியாது என்பதைத் தெளி (4 ஆம் பக்கம் பார்க்க)

## வற்றாப்பளை எறிகணை வீச்சு

## தென்னிலங்கை வங்கியில் 8லட்சம் ரூபா கொள்ளை

[கொழும்பு]

கொழும்பு நகருக்கு வெளியேயுள்ள ஹோமாகம பகுதியிலுள்ள கொட்டாவவில் தனியார் வங்கி ஒன்றிலிருந்து சுமார் 8 லட்சம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம்பகல்12.00 மணியளவில் கைக்குண்டு, கிறிஸ்கத்தி, கைத்துப்பாக்கி போன்ற ஆயுதங்களுடன் வங்கிக்குள் பிரவேசித்த ஐந்து இளைஞர்கள் இக் கொள்ளையில் ஈடுபட்டனர்.

கொள்ளையில் ஈடுபட்ட வாலிபர்கள் 'பிக்கப்' வாகனமொன்றில் தப்பிச் சென்றதாகவும் இவ் வாகனம் ஒருமைல் தூரத்திற்கப்பால் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சு.கட்சிக்குதலைமை இல்லை சம்பவங்கள் காட்டுகின்றன

### -- வீரசிங்கமல்லிமாராச்சி

[கொழும்பு]

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கென ஒருதலைமை இன்றில்லை இதன லேயேபாராளுமன்றத்தில் சிலசம்பவங்கள் இடம்பெற்றன என்று உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்

அவசரகால நிலை நீடிப்பு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் மேலும்,

நாம் ஜனநாயகத்தை மதிக்கின்றோம் ஜனநாயக ரீதியிலேயே பிரச்சினைக்குத்தீர்வு காண விரும்புகின்றோம். சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தவறான முறையில் நடந்து கொண்டனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜனநாயகக் கட்சி என்றால் அதற்குள் ஹெலஉறுமய என்ற பிரிவுஇருப்பது ஏன் எனவும் கேள்வி எழுப்பினார்.

அத்துடன் அநுரா பண்டாரநாயக்கா விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனப் பகிரங்கமாக முன்பு கூறியுள்ளார் எனவும் தெரிவித்தார்.

## கணித விஞ்ஞான ஆசிரியர் பரீட்சை நிலைய பெயரில் சிறு மாற்றம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் எதிர்வரும் சனியன்று நடைபெறவுள்ள கணித விஞ்ஞான ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளில் யாழ்ப்பாண மத் ... ளம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அத்துடன் சனியன்று நடைபெறவுள்ள க.பொ.த (சாதாரண) பரீட்சையின் செய்முறைப் பரீட்சைக்கான அனுமதி

## நியாயப்படுத்த முடியாத

## சிறிமாவைச் சந்திக்க

ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளில் யாழ்ப்பாண மத்திய மகாவித்தியாலயம் என்று பரீட்சை நிலையம் ஒதுக்கப்பட்டவர்கள் அதனை யாழ்ப்பாண மத்திய கல்லூரி என்று திருத்திக்கொள்ளும்படி யாழ். பிராந்திய கல்வித்திணைக்க...

...பெறவுள்ள க.பொ.த (சாதாரண) பரீட்சையின் செய்முறைப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் கல்வித் திணைக்களத்துடன் உடனடியாக தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

### யாழ். உதவி அரச அதிபர் பிரிவிற்கு

## ஒரு வருட காலத்திற்குள் 4 உதவி அரச அதிபர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் பிரிவுக்கு உதவி அரசாங்க அதிபர் ஒருவர் எப்போ நிரந்தரமாக நியமிக்கப்படுவார் என அப்பகுதி மக்கள் அங்கலாய்த்த வண்ணம் உள்ளனர். இது விடயம் தொடர்பாக யாழ் செயலகத்தில சந்தித்த அப்பகுதி பிரஜை ஒருவரை கேட்ட போது தமது பிரிவில் கடந்த ஒரு வருட காலப்பகுதிக்குள் உதவி அரசாங்க அதிபராக நான்கு பேர் நியமனம் பெற்றுள்ளதாகவும் நாலாவதாகத் தற்பொழுது நியமிக்கப்பட்டுள்ள உதவி அரசாங்க அதிபரும் விரைவில் யாழ். செயலகத்திற்குள் ஏற்பட்டுள்ள பிரதான வெற்றிடம் ஒன்றிற்கு நியமிக்கப்படவுள்ளதாகத் தான் அறிவதாகக் கூறினார்.

குறிப்பிட்ட பகுதிக்கு உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப்படும் ஒருவர் தொடர்ச்சியாக நான்கு ஆண்டுகளுக்கு அங்கு கடமையாற்ற வேண்டும். அதன் பின்னரே அவர் வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படல் வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ச)

## மகனைப் போராட்டத்தில் இணைத்த பெற்றோர்

"என் மகனை ஏற்றுக்கொள்ளுங்கள் உங்கள் போராட்டத்திற்கு எங்கள் பங்களிப்பு" அராலி வடக்கு செட்டியார் மடத்தைச் சேர்ந்த மரியசெல்வமும் மனைவி அன்னை மேரியும் தங்கள் இரண்டாவது மகன் கோமேஸ் பரனை அராலி கடற் புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர்கள் பாலகுமார், தேவனேசன் ஆகியோர்களிடம் போராட்டத்திற்கு ஒப்படைத்த பொழுது இவ்வாறு கூறினார்கள்.

மகனை ஆரத்தணைத்த பெற்றோர் விடை கொடுக்கும் பொழுது புறநானூற்று வீரத்தாய் போன்று தலைவாரி பொட்டிட்டுத் தமது அன்பு முத்தங்கள் கொடுத்து பாசத்தோடு வழியனுப்பி வைத்தார்கள்.

இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொரு பெற்றோரும் இப்படியாக மாறுவதன் மூலம் போராளிகளின் கரங்களை பலப்படுத்தி இறுதி இலட்சியத்தை விரைவாக்கலாம்.

### ஊரடங்கு நீக்கம்

யாழ் மாவட்டத்தில அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்றுமாலை 6.00 மணியுடன் நீக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

## நியாயப்படுத்த முடியாத துக்ககரமான சம்பவம்

### முல்லை. செஞ்சிலுவை அறிக்கை

வற்றாப்பளை அம்மன் ஆலய எறிகணை வீச்சில் காயப்பட்டவர்கள், இறந்தவர்கள் அனைவரும் பொது மக்கள், சிறு குழந்தைகள், பெண்கள், முதியோர் போன்ற பலதரப்பினரும் இதில் அடங்குவர். கோவில் தரிசனத்துக்காக பொதுமக்கள் கூடியிருந்த சரித்திரப் பிரசித்தி வாய்ந்த புனித தலத்தில் நடைபெற்ற நியாயப்படுத்த முடியாத துக்ககரமான சம்பவம் நடைபெற்றது மிகவும் வேதனைக்குரியதாகும்.

இவ்வாறு வற்றாப்பளை அம்மன் ஆலய எறிகணை வீச்சு தொடர்பாக முல்லைத்தீவு செஞ்சிலுவைச் சங்க கிளை சார்பில அதன் செயலாளர் க. கதிரவேலு வெளியிட்ட அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வற்றாப்பளை அம்மன் கோவில் வருடாந்த பொங்கல் விழா கடந்த 18.05.92 திங்கள் அன்று நடைபெற்றது. இந்த விழாவை முன்னிட்டு பெருந்தொகையான பக்தர்கள் அதிகாலை தொடக்கம் கோவிலுக்கு வருகை தந்து கொண்டிருந்தனர். இங்கு முதலுதவிச் சிகிச்சை அளிக்கும் நோக்கமாக முல்லைத்தீவு செஞ்சிலுவைச் சங்கக் கிளை தனது நடமாடும் வைத்திய சேவைப் பிரிவினைத் தொண்டர்களுடன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்கள் எம்மை சூழ்ந்து நின்று கத்திகள், வாள்களால வெட்டினர்

### கரபொல, முத்துகல சம்பவம் பற்றி விபரிப்பு

(நமது நிருபர்)

"ஓடினால் பிடித்து வெட்டுவோம் நின்றீர்களானால் ஒன்றும் செய்யமாட்டோம் என முஸ்லிம் காடையர்கள் கூறினர் அதனால் அவர்களது பேச்சை நம்பி நின்றபோது எம்மைச் சூழ்ந்து நின்று கத்திகளாலும், வாள்களாலும் வெட்டினார்களென பொலநறுவை மாவட்டத்தில் கடந்த மாதம் நடைபெற்ற படுகொலைச் சம்பவங்களில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் கொழும்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் பெண்மணி ஒருவர் கூறினார்.

கடந்த மாதம் 29 ஆம் திகதி மட்டக்களப்பு பொலநறுவ மாவட்டங்களின் எல்லைப்புறத்திலுள்ள தமிழ்க்கிராமம் ஒன்றிற்குள் ஆயுதபாணிகளாகப் புகுந்த முஸ்லிம்காடையர்கள் அங்கு வாழ்ந்த சிறுவர்கள், முதியவர்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட தமிழர்களை வெட்டிக் கொன்றதுடன் நூற்றுக்கணக்கானோரை வெட்டிப் படுகாயப்படுத்தியதும் தெரிந்ததே.

மேற்படி சம்பவத்தில வெட்டுக்காயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பிய அப்பெண்மணி மேலும் கூறுகையில்

(4 ஆம பக்கம் பார்க்க)

## திருக்கோணமலையில் கல்வி பாதிப்பு மாணவர் படையினரால் கைது

(திருக்கோணமலை)

திருக்கோணமலை நகரிலுள்ள தமிழர்கள் இராணுவத்தால் அதிகளவில் கைது செய்யப்படுகின்றனர். குறிப்பாக மாணவர்களே அதிகமாக கைது செய்யப்படுகின்றனர்.

திருக்கோணமலையின் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள நகரப்பகுதிகளிலேயே பாடசாலைகள் இயங்குகின்றன. அதிலும் ஓரிரு தமிழ்ப் பாடசாலைகளே இயங்குகின்றன. பாடசாலைகளில ஐந்தாமாண்டுக்கு மேல் கல்வி கற்கும் மாணவர்கள் இரா

(4 ஆம் பக்கம் பார்க்க)

...கின்றேம் ஜனநாயக ரீதியிலே தெரிவித்தார்.

## சிறிமாவைச் சந்திக்க தமிழ்க் குழுக்கள் தீர்மானம்

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பங்களிப்பும் அவசியம் ஆகும். எனவே பாராளுமன்றத் தெரிவுக் குழுவைப் பகிஷ்கரிக்க அக்கட்சி எடுத்த முடிவைக் கைவிட வேண்டும் என்று தமிழ் அரசியல் குழுக்களும் முஸ்லிம் காங்கிரசும் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன.

மேலும் இது தொடர்பாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை அவரது இல்லத்தில் சென்று சந்திப்பதற்கும் கொழும்பிலுள்ள அரசியல் குழுக்களும் முஸ்லிம் காங்கிரசும் முடிவு செய்துள்ளன. இக்கூட்டுத் தூதுக்குழுவினர் பாராளுமன்றத் தெரிவுக் குழுவைப் பகிஷ்கரிக்கும் முடிவைக் கைவிடும்படியும் அவரைக் கோரவுள்ளனர்.

### யாழ் திரும்பியோர் பதிவு செய்க

அகதிகளாக இந்தியாவில் தங்கியிருந்தபின் தற்போது யாழ் குடாநாட்டிற்குள் வந்து தங்கியுள்ளவர்கள் தத்தமது பெயர் விபரங்களை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தில் உடனடியாகப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### அழிஞ்சிப்பொத்தான

## படுகொலை தொடர்பாக பன்னிரண்டுபேர் கைது

[கொழும்பு]

அழிஞ்சிப் பொத்தான கொலைகள் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் ஆரம்ப பாடசாலை ஆசிரியர் ஒருவர் உட்பட பன்னிரண்டு பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் இவர்களில் சிங்கள ஊர்காவல் படையைச் சேர்ந்த மூவரும், முஸ்லிம் வாலிபர் ஒருவரும் அடங்கியுள்ளனர்.

### ஜப்பான் இசைக் குழுவினர்

## விமானத்தினுள் குழப்பம்; கொழும்பில் தரையிறக்கம்

(கொழும்பு)

டோக்கியோ நோக்கிப் பறந்து கொண்டிருந்த ஏயர் லங்கா விமானத்தில் பயணிகள் ஈடுபட்டதைத் தொடர்ந்து விமானம் மீண்டும் கட்டுநாயக்காவில் தரையிறக்கப்பட்டது.

கடந்த புதன், வியாழக்கிழமைகளில் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் "டெதி அன்ட் றிபேர்த்" என்ற நிகழ்ச்சியை நடத்திய ஜப்பானிய கலைஞர்கள் குழுவே இந்தக் கைங்கரியத்தில ஈடுபட்டுள்ளது.

இவர்கள் தமது நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு தங்களுக்கு என பிரத்தியேகமாக அமர்த்திக் கொண்ட "ஏயர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### கேக் ஐசிங் வகுப்புகள்

குறைந்த செலவில் குறுகிய காலத்தில் திறமை மிக்க ஆசிரியைகளினால் கேக் ஐசிங் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட உள்ளன தொடர்புகள் 1) செல்வி சாந்தி குணரட்ணம் சண்டிலிப்பாய் மேற்கு சண்டிலிப்பாய் (30-5-92) மு.ப 9.00 மணி 2) K. யோசவ் சங்கானை றோட் அச்சுவேலி (சூசையப்பர் கோவில் முன்பாக [3.5 92) பி.ப 3 மணி (2603]

### 80வது-பிறந்த தினம்

யோகாசனக் கலாநிதியும், யோகாசன ஸ்தாபனத்தின் இயக்குநருமான சுவாமி சிறீ சிதானந்த சரஸ்வதியின் எண்பதாவது பிறந்ததினம், எதிர்வரும் ஞாயிறன்று (31-05-92) காலை பத்து மணியளவில் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் கொண்டாடப்படவிருக்கின்றது.

TENDER NOTICE
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
SUPPLY OF UNIFORM MATERIAL

*Sealed tenders are invited for the supply of 500 metres Crey Polyester Suiting.*

*CONDITIONS*

1. *Tenderers should forward a Postal Order / Money Order for Rs. 150/- being non-r fundable tender fee drawn in favour of Bursar, University of Jaffna.*
2. *Sample of 6" x 6" material should be attached to the tender.*
3. *Selected tenderers should be able to supply the material within three*

## புதிய பஸ் சேவை 1-ஆம் திகதி ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலிருந்து வவுனியாவிற்கு புதிய மினிபஸ் சேவையொன்று எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது. கிளிநொச்சி பஸ் நிலையத்தில் இருந்து அதிகாலை ஐந்து மணிக்கு புறப்படும் இந்த மினிபஸ்வண்டி எல்லாத் தரிப்பிடங்களிலும் தரித்து ஓமந்தை சென்றடையும். பின்னர் அங்கிருந்து பத்துமணியளவில் புறப்பட்டு கிளிநொச்சியை வந்தடையும். பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இச் சேவை ஆரம்பிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இப் பாதையில் தற்போது இடம் பெற்று வரும் போக்குவரத்து சேவைகள் வழமைபோல இடம் பெறும்.

அத்துடன் கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி, இராமநாதபுரம் மற்றும் உருத்திரபுரம். பகுதிகளுக்கான மினி பஸ் சேவையும் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

# அரசாங்கம் தீர்வை முன்வைத்தால் ஆதரவு நல்கத் தயார்

- அதாவுட செனவிரத்தினா

அரசாங்கம் வடக்கு- கிழக்கு இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றை முன்வைக்குமாயின் அதற்கு நாம் ஆதரவு நல்கத் தயார் அந்தத் தீர்வு தான் எங்கே என்று கேகாலை மாவட்ட எம் பி திரு. அதாவுட செனவிரத்தினா பாராளுமன்றத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

இன்று தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும். இந்தியாவின் எதிர்ப்பை மனதில் கொண்டு இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அபிவிருத்திச் செயலமர்வு

[பருத்திக்துறை]

யாழ் பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம் வடமராட்சியிலும், தென்மராட்சியிலும் பல்வேறு வகையான அபிவிருத்திச் செயலமர்வுகளை நடாத்தவுள்ளது இதற்கான நடவடிக்கைகளை யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுபடிவலால மேற்கொண்டு வருகிறார். யாழ். பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம் கடந்த வருடம் யாழ்ப்பாணத்திலும், வலிகாமத்திலும் அபிவிருத்திச் செயலமர்வுகளை நடாத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. [25]

## பாதுகாப்பு ஏற்பாடு வவுனியாவில் தீவிரம்

(கொழும்பு)

வவுனியாவில் நாளை முதல் நடைபெற இருக்கும் ஜனாதிபதி இம்பெயர் சேவையை முன்னிட்டு பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்பட்டு கடுமையான விதிமுறைகளும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது

பாதுகாப்புப் படையினரின் பாஸ் அனுமதி இன்றி எவரும் இப் பகுதிகளுக்குள் நடமாட முடியாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை நேற்று கொழும்பிலிருந்து வந்த வாகனங்கள் வவுனியா நகரில் பிரவேசிக்க அனுமதிக்கப்பட வில்லை.

## அரசியலில் இப்போது ஓய்வு எடுக்கப் போவதில்லை

-தொண்டமான் அறிவிப்பு

[பண்டாரவளை]

சில அரசியல்வாதிகள் மலையகத்திற்கு வரும் பொழுது மலையக மக்கள் பற்றி அனுதாபப்படும் வகையில் பேசுகின்றனர். ஆனால் பாராளுமன்றத்தில் அவர்களின் பேச்சு வேறு விதமாகவே உள்ளது பொதுவாக எமது மக்களுக்கு எதிரானதாகவே அப்பேச்சுக்கள் அமைகின்றன அவற்றுக்கு பதில் கொடுக்கவேண்டிய நிலையில் நாம் உள்ளோம்.

இவ்வாறு இ.தொ.கா. தலைவரும் உலலாச கிராமிய தொழிற்துறை அமைச்சருமான எஸ். தொண்டமான் அப்புத்தளை நொட்டுவாகல தோட்டத்தில் கடந்த சனிக்கிழமை நடந்த கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் மலையக மக்களின் பல்வேறு முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டு உள்ளது. இந்நிலையில் நான் ஓய்வு எடுக்கலாம் என்று யோசித்திருந்தேன் ஆனால் நான் மலையகத்தில் எப்பாகத்தில் சென்றாலும் மக்கள் கட்டுக்கணக்கில் மகஜர்களை கையளிக்கின்றனர்

இந்நிலையில் இலங்கையின் இன்றைய அரசியல் நிலமைகளை வைத்துப்பார்க்கும் போது நான் தொடர்ந்தும் அரசியல் தொழிற்சங்க ரீதியில் செயற்பட வேண்டுமென்ற எண்ணுகிறேன்.

அதேவேளையில் மலையக மக்களும் எந்தப் பிரச்சினைகள் வந்த போதும் மலையகத்திலேயே வாழ வேண்டும் என்ற உறுதிப்பாட்டைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றுபவர்கள் தமக்கு ஆசிரியர் தொழில் கிடைக்கவில்லையென கூறுகின்றனர். அதேவேளையில் அரசாங்கத்தின் ஏனைய தொழில் துறைகளில் உள்ள தொழில் வாய்ப்புக்கள் பற்றி சிந்திக்கின்றார்கள் இல்லை. எமது மக்களுக்கென எல்லா தொழில் வாய்ப்புக்களிலும் 5.5 % இட ஒதுக்கீடு உள்ளது அவற்றைப் பெற்றுக் கொள்வதில் மலையக மக்கள் அதிக அக்கறை காட்ட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

மேலும் மாதச்சம்பளத் திட்டத்திற்கு மாற்றுத் திட்டமாகவே 25 நாள் வேலை அல்லது அதற்குரிய சம்பளம் என்ற திட்டத்தினை நாம் முன்வைத்துள்ளோம். இதன்படி தொழிலாளர் மாதத்தில் 25 நாள் வேலை அல்லது அதற்குரிய சம்பளத்தைப் பெறுவர்

தொழிலாளர்க்கென்று ஒரு மரியாதையுண்டு அதனை எமது மக்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும்

## பருத்தித்துறை அரச வைத்தியசாலைக்கு புதிய ஜெனரேற்றர்

(பருத்திக்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையால் வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிலையத்திற்கு சுமார் 60,000 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட புதிய ஜெனரேற்றரை வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் சார்பில் தமிழீழ கடற்படைச் சிறப்புத் தளபதி. திரு சூசை பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளையிடம் கையளித்தார்.

வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற்ற இவ் ஜெனரேற்ரர் கையளிப்பு வைபவத்திற்கு மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளையே தலைமை தாங்கினார். வைபவத்தில் வைத்திய சாலை பிரான்ஸ் வைத்திய சேவைக்குழு இணைப்பதிகாரி திரு சேவியர், பிரான்ஸ் வைத்திய சேவை சத்திரசிகிச்சை நிபுணர் வடமராட்சி கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். செல்லத்துரை உட்பட வைத்தியசாலை ஊழியர்கள், வைத்தியசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர் ஆகியோர் கலந்துகொண்டனர். அபிவிருத்திச் சபை செயலாளர் திரு. வி செல்வராசா நன்றியுரை வழங்கினார். இப்புதிய ஜெனரேற்றரை பிரான்ஸ் வைத்திய சேவைக்குழுவினர் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினரின் கோரிக்கையின் பேரில் கொழும்பில் கொள்வனவு செய்து கப்பல் மூலம் கொண்டுவந்து வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினரிடம் கையளித்திருந்தனர். வைத்தியசாலை அபிவிருத்திச் சபை பிரான்ஸ் வைத்திய சேவைக்குழுவுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளது (25)

## கூறுவிலை கோரல்

## சர்வதேச நாணய நிதியம் அரசின் பண விரயங்களால் கடனை இடை நிறுத்தியது

இன்றைய அரசாங்கத்தினால் வேண்டுமென்றே மேற்கொள்ளப்படும் பணவிரயங்களினால் தான் சர்வதேச நிதியம் தனது கடனின் இரண்டாவது கட்ட நிதியையே இடை நிறுத்தி வைத்துள்ளது

இவ்வாறு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி விடுகதுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அண்மையில் அரசாங்கம் மேற்கொண்ட வரி அதிகரிப்பு, எரிபொருள் விலை பேற்றம் ஆகியன பொதுமக்களின் வாழ்க்கைச் செலவை மேலும் உயர்த்தியுள்ளன. இந்த புதிய வரிச்சுமையை அடுத்து நாளாந்த பாவனைப் பொருள்கள் உட்பட அனைத்துப் பொருள்களின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அரசின் தவறான பொருளாதார கொள்கை ஒழுங்கீன நிர்வாகம் போன்றவையே இவ் வரிச்சுமைகளுக்கு காரணமாகும்

இப் பிரச்சினைகளில் ஒரு சிறு பகுதியே பாதுகாப்புச் செலவினங்களாக கொள்ள முடியும் அரசின் வீண் பண விரயமும் தவறான வழிநடத்தலும் தவறான முறையில் நிதியைப் பயன்படுத்தலுமே உண்மையான பிரச்சினைகளாகும்

இப்பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கலாம் என அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது, அதாவது தனிமனித அபிலாஷைகளுக்கு ஏற்ப அரசு நடைமுறைப்படுத்தல் நிறுத்தப்பட வேண்டும் சுதந்திரமாக செயற்படக் கூடிய விதத்திலும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கக் கூடிய விதத்திலும் முழுநேர தொழிற்பாடுடைய நிதியமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

இறைவரி பணக்கொடுப்பனவு சம்பந்தமான ஒழுங்கு முறைகள் அவசியமானதாகும். அத்துடன் அர்த்தமற்ற ஆடம்பரக் களியாட்டங்களும் விழாக்களும் கொண்டாட்டங்களும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் அவ் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## கைத்தொழிற் பயிராக பீற்றூட்

மரக்கறி வகைகளுள் ஒன்றான பீற்றூட் கைத்தொழில் பயிராக மாறக் கூடிய சாத்தியக் கூறுகள் யாழ் மாவட்டத்தில் இருப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது பனம்பொருள் அபிவிருத்திச் சபையினருக்கு தொடர்ச்சியாக பெருமளவில் பீற்றூட் தேவைப்படுவதனால் கமக்காரர் விளைவிக்கும் பீற்றூட்டை தொடர்ந்து கொள்வனவு செய்ய இவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளர்கள் தற்போது. ஒரு கிலோ பீற்றூட் 7 ரூபா 50 சதமாக கொள்வனவு செய்யப்படுகிறது. பீற்றூட் பயிர் செய்யும் போது சிபாரிசு செய்யப்பட்ட இனங்களாகிய "கிறிம்சன்குளோப்" டிற்றோயிட் டாக் றெட்" என்பவற்றில் ஒன்றினைத் தெரிவு செய்யலாம். ஒரு ஹெக்டேயரில் விதைக்க 6 கிலோ விதை போதுமானது சிறப்பான செய்கையின் கீழ் ஒரு ஹெக்டேயரிலிருந்து 25-30 தொன் பீற்றூட் விளைவாகப் பெறலாம.

தேவையான கிறிம்சன் குளோப் பீற்றூட் இன விதைகளை தாவடியிலுள்ள தமிழீழ ஆய்வு நிறுவன விவசாயப் பிரிவு விநியோகிக்கத் தயாராகவுள்ளது.

## தீவகம் கலைவிழா

[யாழ்ப்பாணம்]

அரியாலை திறந்த வெளி அரங்கில் தீவக கலை பண்பாட்டுக் கழகத்தினர் நடாத்தும் கலைவிழா எதிர்வரும் ஞாயிறு பிற்பகல் ஆறு மணியளவில் தீவக கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் குமணன் தலைமையில் நடைபெறவுள்ளது விடுதலைப் புலிகளின் முக்கியபிரமுகர்பலர் சிறப்புரை ஆற்றுகின்றனர். 'மானம் காத்த மாவீரர்கள்' (கிராமிய நடனம்). வில்லிசை'. பொன் சுந்தரலிங்கம் அவர்களின் (இசைக் கச்சேரி), 'தர்மக் கனல்' (நாட்டிய நாடகம்), 'மாறிவிட்டோம்' (தாளலய நாடகம்), 'புதுயுகப்' (சமுதாய நாடகம்) ஆகிய கலை நிகழ்ச்

## தமிழ்த்தினப் போட்டி

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த் தினப்போட்டி கடந்த 21/05/92 வியாழக்கிழமை மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெற்றது. இதில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் யாழ் மண்டைதீவு மகாவித்தியாலயமாணவி செல்வி தருமநாயகம் சுஜாஜினி மேற்பிரிவில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

material should be attached to the tender.

3. Selected tenderers should be able to supply the material within three weeks on receipt of the confirmed order at the University of Jaffna.

Forward the tender documents to the Bursar, University of Jaffna by registered post or personally with the mark 'Tender for the Supply of Uniform Material' to reach him on or before 18-06-1992 at 10 00a m Tenders will be opened on the same day at10-30 a. m.

Registrar.

(சி/4460)

---

யர், பிரான்ஸ் வைத்திய

---

## கூறுவிலை கோரல்

### சாராயப் போத்தல் மூடி உற்பத்தி இயந்திரம்

மேற்படி இயந்திரத்தைச் செய்து வழங்கக் கூடிய நிறுவனங்கள் தமது கூறுவிலையை கீழ்வரும் முகவரிக்கு 01-06-92 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும.

பொது முகாமையாளர்,
வட மாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசம்,
இல. 499, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/4467]

---

இன்றைய அரசியல் நிலமைகளை வைத்துப்பார்க்கும் போது நான் தொடர்ந்தும் அரசியல் தொழிற் சங்க ரீதியில் செயற்பட வேண்டுமென்ற தேவை இருபபதை உணர் ... பெறுவர்

தொழிலாளர்க்கென்று ஒரு மரியதையுண்டு அதனை எமது மக்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

## பாடசாலை உபகரணங்கள் தற்போது வழங்கப்படுகிறது

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்குத் தேவையான கரும்பலகைகள், நிற வெண்கட்டிகள் ஆகிய பாடசாலை உபகரணங்கள் தற்போது வழங்கப்படுகின்றன.

யாழ். கோட்டத்திற்குட்பட்ட கொத்தணிப் பாடசாலை அதிபர்கள் தமக்குத் தேவையான கரும்பலகைகளையும் நிற வெண்கட்டிகளையும் இதுவரை பெறாதிருந்தால் உடனடியாக யாழ். கோட்டக் கல்வி அலுவலகத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ். கோட்ட பிரதிக் கலவிப்பணிப்பாளர் திரு. வேலாயுதம் கேட்டுள்ளார். (ச)

## அம்பாறையில் 800 தொண்டர் ஆசிரியர்

[அம்பாறை[

அம்பாறை மாவட்டத்தில் 800 தொண்டர் ஆசிரியர்களை நியமிக்க சிபாரிசு செய்யப்பட்டுள்ளதாக கல்விச் சேவை ஆணைக் குழுவின் தலைவர் ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

---

கனல்' (நாட்டிய நாடகம்), 'மறியிட்டோம்' (தாளலய நாடகம்),'புதுயுகட' (சமுதாய நாடகம்) ஆகிய கலை நிகழ்சிகளும் இடம்பெறவுள்ளன.

தீவு மகாவித்தியாலயம் ... செல்வி தருமநாயகம் சுஜாஜினி மேற்பிரிவில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

[(88)

---

## நினைவுகூருகின்றோம் . . .

## 1992-05-28

1984 - ம் ஆண்டு இதேதினத்தில் தப்பியோட முயற்சித்த போது சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

அம்பாறை அக்கரைப்பற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1986 - ம் ஆண்டு திருக்கோணமலை, மூதூர்ப் பகுதியில வீரச்சாவெய்திய -

**கப்டன். சுஜி** [ இராசரத்தினம் - நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் ]

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லபபட்ட தமிழ்ப் பொது மகன்.

1987 - ம் ஆண்டு வடமராட்சியில் சிறிலங்காப்படையினர் மூன்றாவது நளாக மேற்கொண்ட 'ஒபரேசன் லிபரேசன் ' நடவடிக்கையின்போது கொலலப்பட்ட தமிழர்கள்.

1989 - ம் ஆண்டு சுன்னாகத்தில் தேசவிரோத சக்திகளினால் சுடடுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளர்

**குலசேகரம் பத்மநாதன் திருவிளங்கம்.**

மட்டக்களப்பு - வந்தாறுமூலையில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 2 தமிழ் இளைஞர்கள்

சாவகச்சேரியில், இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மட்டுவில் வடக்கைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன் மற்றும், இதே ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்ட நாகர்கோவில், வண்ணார்பண்ணைப் பகுதிகளைச் சேர்ந்த - 2- தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு திருக்கோணமலை, ஆட்டுமா பாலத்தடியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**பாண்டியன்** [ வேலாயுதம் தவராஜசிங்கம் - கன்னியா, திருக்கோணமலை ]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4463)

---

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
1ம், 2ம், 3ம், 4ம்
கல்வியாண்டு

## ஆண்டு இறுதிப் பரீட்சை - 1991

### கலை | வர்த்தகம் முகாமைத்துவம்

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதி வாய்ந்த சகல வருட மாணவர்களும் 30-06-92 இற்கு முன்பாக யாழ் பல்கலைக்கழகம், பரீட்சைக் கிளையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். மீள் பரீட்சார்த்திகள் தகுந்த கட்டணபற்று சீட்டுடன் தமது விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும். இக் குறிப்பிட்ட திகதிக்குப் பின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

பதிவாளர்

[சி/ 4465]

---

## மரண அறிவித்தல்

### திரு. S. S. மயில்வாகனம்

மண்ணில்: 1914 - 04 - 14

விண்ணில்: 1992 - 04 - 28

முள்ளைத்தீவு பிரபல வர்த்தகரும், முன்னாள் பட்டின சபைத் தலைவரும், ஞானவைரவர் ஆலய தர்மகர்த்தாவுமான திரு S. S. மயில்வாகனம் அவர்கள் சென்ற 28-04 92 இல் சிவபதமடைந்து விட்டார் அவர் அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் சிவகுருநாதன் அதிபர் ஆயிலடி கனிஷ்ட வித்தியாலயம். பரமேஸ்வரி. சிவபாலன் [ SMS ] நாகேஸ்வரி B. A, [டென்மார்க்] சிவராசன் (சிவா பிரதர்ஸ்) ஆகியோருடைய அருமைத் தகப்பனாரும், தர்மகுலநாயகி, இராசையா (நீர்ப்பாசன இலாகா). சீதாலட்சுமி, சிவராசா B. Com. (டென்மார்க்), பத்மினி ஆகியோரின் அன்பு மாமனாரும், யதீந்திரா, யாமினி.ரஜீந்திரா' யாழினி ஜனார்த்தனி, ஜனார்த்தனன் சுரேந்திரா, ராஜேந்திரா, சுபத்திரா, கௌசிகாத்மஜன் (டென்மார்க்), எழினி (டென்மார்க்), துவாரகா ஆகியோரின் அருமைப் பேரனாருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 1992-04-29-ல் ஒட்டுசுட்டான் புதுக்குளம் இந்து மயானத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியறிதலைத் தெரிவிப்பதுடன் வரும் 28-05-92-ல் நடைபெறவுள்ள அந்தியேட்டி வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்களை அழைக்கிறோம்.

தகவல்: இராசையா பரமேஸ்வரி
மகள் புதுக்குளம், ஒட்டுசுட்டான்.

[சி/4437]

---

நலம்தானா.................... ?

உடலும் உள்ளமும் நலம்தானா ..............?

### கண்டறிய இன்று மாலை வாருங்கள்

## "சுகநலம்" -கூத்து

இடம்: யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி யுபிலி மண்டபம.

நேரம்: இன்று மாலை 5 மணி

யாழ்.மிட்-ரவுண்
றோட்டறக்ட் கழகம்
வழங்கும் நிகழ்ச்சி

[2604]

## சிந்தனைக்கு

நாம் கேட்பதை விடவும், நாம் பார்ப்பதில்தான் நமக்கு நம்பிக்கை உண்டாகின்றது.

— ஹெரோ டோட்டஸ்

ஈழநாதம்

81, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 28-05-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 01

## கண்துடைப்பாகும் விசாரணைக் கமிஷன்கள்

வற்றாப்பளை கண்ணகை அம்மன் பொங்கல் திருவிழவின் போது சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட ஷெல் தாக்குதல்களினால நிகழ்ந்த கோரச் சம்பவம் தொடர்பாக, விசாரணை மேற்கொள்ள சிறிலங்கா அரசாங்கம் ஓர் விசாரணைக் கமிசனை அமைத்துள்ளது. மூவரைக் கொண்ட இந்த விசாரணைக் கமிசன் வவுனியாவிலேயே தனது விசாரணையை மேற்கொள்ள இருப்பதாகவும், சம்பவம் இடம்பெற்ற வற்றாப்பளை அம்மன் ஆலயப் பகுதிக்கு அவ்விசாரணை கமிசன் செல்லாது எனவும் தெரியவருகிறது.

சிறிலங்கா அரசாங்கம் தற்பொழுது படுகொலைகளை நிறுத்தி விட்டு அதை விசாரணை செய்வதற்கு கமிசன்களை நியமிப்பது அண்மையில் வழமையான ஒரு நடவடிக்கை ஆகிவிட்டது. கொக்கட்டிச்சோலை, அழுஞ்சிப் பொத்தானை, வற்றாப்பளை என விசாரணைக் கமிசன்கள் நீண்டு கொண்டே செல்கின்றன. ஆனால், விசாரணைக் கமிசன்களின் முடிவு தான் படுகொலைகளை நிறுத்துவதற்கோ அன்றி குற்றவாளிகளைத் தண்டிப்பதாகவோ இல்லை!

1988, 1989 ஆம் ஆண்டுகளில் தென்னிலங்கையில் சிறிலங்கா அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைகளும், அரசின் சட்ட பூர்வமற்ற கொலைகாரக் கும்பல்களும மேற்கொண்ட படுகொலைகள் இன்று உலகப்பிரசித்தமானவை. இதனைத் தொடர்ந்து இலங்கையில் அரசாங்கம் மேற்கொள்ளும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாகப் பலத்த கண்டனங்களும் எழுந்தன. உலகநாடுகளின் நிதி உதவிகளும் பாதிக்கப்படும் நிலையை அடைந்தன. இந்நிலையில் மனித உரிமை ஸ்தாபனங்களைத் திருப்திப்படுத்துவதன் மூலம், உதவி வழங்குவோரைத் திருப்திப்படுத்த வேண்டிய நிலை சிறிலங்கா அரசாங்கத்திற்கு எழுந்தது. இந்நிலையில் சர்வதேச மனித உரிமை ஸ்தாபனங்கள் விதித்த 32 நிபந்தனைகளில முப்பதை நிறைவேற்றுவதாகச் சிறிலங்காவும் ஒப்புக்கொண்டது.

இந்த நிபந்தனைகளின் ஒன்றின் பிரகாரமே தற்பொழுது படுகொலைகள் குறித்து உடன் விசாரணைகளை மேற்கொள்ளவென உடனடியாக சிறிலங்கா அரசாங்கம் விசாரணைக் கமிசன்களை நியமித்துவருகிறது. இதில் ஓரளவு சிறிலங்கா அரசாங்கம் வெற்றியும் கண்டுள்ளது. சிறிலங்கா அரசாங்கத்திற்கு உதவி வழங்கும் முக்கியநாடுகளில ஒன்றாகிய அமெரிக்கா சிறிலங்காவில் மனித உரிமைகள் விவகாரங்களில் சற்று முன்னேற்றம் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளது.

# புலிகளுக்கு ஆதரவு வழங்கியே தீருவோம் விளைவுகளைச் சந்திக்கத் தயார்

### பாட்டாளி மக்கள் கட்சித்தலைவர் ராமதாஸ்

(சேலம்)

எமது ஒட்டு மொத்தமான ஆதரவு விடுதலைப் புலிகளுக்கு உண்டு. அதனால் வரும் விளைவுகளைச் சந்திக்க தயார். லட்சக் கணக்கான தமிழ் இளைஞர்களும் தயாராக இருக்கின்றனர். இவ்வாறு பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எம். ராமதாஸ் கூறியுள்ளார்.

அண்மையில் சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில்:

''தூங்கிய தமிழன் விழித்துக் கொண்டான். எழுபது ஆண்டு சிறைத் தண்டனை என்றாலும் புலிகளை ஆதரிப்போம் அதிலிருந்து பின்வாங்க மாட்டோம்'' விடுதலைப்புலிகளுக்கெதிரான தடைவிதிப்பு ஒட்டுமொத்தமாகத் தமிழர்களுக்கு எதிரான முடிவு அவசரப்பட்டு எடுத்த முடிவு, ஜெயலலிதாவின் நிர்ப்பந்தத்துக்காக எடுக்கப்பட்ட முடிவு இதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் எனத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கைக் கெடுத்து விட்டார்கள். மிகப் பெரிய துரோகத்தைத் தமிழகத்துக்குச் செய்து விட்டார்கள் என்றெல்லாம் ஜெயலலிதா, வாழப்பாடி ஆகியோர் புலம்பினார்கள், புலம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

சட்டம் ஒழுங்கு கெட்டதென்றால் ஊரடங்கு போடப்பட்டு மக்கள் வெளியே வராத நிலை ஒன்று இருக்கும் அப்பொழுதான் சட்டம் ஒழுங்கு கெட்டதாக இருக்கும். இப்போது அப்படி உள்ளதா? ஆனால் சட்டம் முழுக்கெடும் நிலை வரப்போகிறது எனத் தெரிவித்தார்.

ஜெயலலிதா எடுத்த இம் முடிவுக்கு நன்றி சொல்கிறோம் ஏனென்றால் நாங்கள் தூங்கிக் கொண்டிருந்தோம். இப்போது சொரணை வந்து விழித்துக் கொண்டோம். விடுதலைப் புலிகளைத் தடை செய்ததன் மூலம் விழித்துக் கொண்டோம்.

நம்மக்களுக்குஇன்னும்தமிழ் ஈழம், விடுதலைப் புலிகளின் போராட்டம், பிரபாகரன் பற்றி எல்லாம் சரியாகச் சொல்லப்படவில்லை விடுதலைப் புலிகளை ஆதரித்தால் இப்போதெல்லாம் ஏழு வருடம் ஜெயில் என்கிறார்கள். ஏழு வருடம் என்ன எழுபது வருடம் போட்டாலும் சரி நான் போனால் என்ன? எனக்குப் பிறகு என் மகன் வருவான், என்பேரன் வருவான், போராட அப்போது ஜெயலலிதா இருக்க மாட்டார் நாட்டை விட்டே துரத்தி அடிக்கப்படுவார்.

மேலும் தனதுரையில் காந்தியைச் சுட்டவன் கோட்சே. அவனது இயக்கமான ஆர். எஸ். எஸ் தடை பண்ணினார்களா? இந்திராவைச் சுட்டவன் சீக்கியன். அந்தச் சீக்கிய இயக்கத்தைத் தடை செய்தீர்களா? எனவும் கேள்வி எழுப்பினார்

தமிழர்களின் ஒட்டுமொத்த தமிழ் உணர்வை பழிவாங்கவும் அதுசார்ந்த அமைப்பை ஓரங்கட்ட வேண்டுமெனவும் நினைத்தால் ஜெயலலிதா ஏமாறுவார். தமிழ் மக்கள் விழிப்படையுங்காலம்நெருங்கி விட்டது. இது முக்கியமான காலகட்டமாகும் எனவும் குறிப்பிட்டார்.

# ஜெயலலிதாவிற்கு எதிராய் போராட எதிர்க்கட்சிகள் தீவிர முஸ்தீபு

(சென்னை)

தமிழக எதிர்க்கட்சிகள் இலங்கைத் தமிழர் பிரச்சினை காவிரி நீர்ப்பிரச்சினை ஆகிய இவ் இரண்டு உணர்ச்சிமயமான விவகாரங்களை அடிப்படையாகக் கொண்டு அனைத்திந்திய அ. தி. மு. க அரசுடனான இன்னொரு சுற்றுப்போராட்டத்தை மெதுமெதுவாக ஆனால் உறுதியாக களத்தைத் தயார் செய்து வருகின்றன என தமிழகத்திலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வன்னியர் சமூகத்தின் செல்வாக்கைப் பெற்றுள்ள பாட்டாளி மக்கள் கட்சி புலிகள் மீதான விவகாரத்தை ஏற்கனவே கிளப்பியுள்ளது நாம் புலிகளுக்கு ஆதரவளிப்போம் முடியுமானால் எனக்கு எதிராகவும் கட்சிக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கட்டும் பார்க்கலாம் என அக்கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸ் சவால் விடுத்திருக்கிறார்.

ஏனைய சில கட்சிகளும் புலிகளுக்கு நேரடியாக ஆதரவு தெரிவிக்காமல் ராமதாஸின் இந்தப் போராட்டத்தில் இணையலாம் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புலிகளைத் தடை செய்த பின்னர் இலங்கைத் தமிழர் பிரச்சினையை மத்திய அரசு எவ்வாறு தீர்க்கப்போகிறது என தி மு க தலைவர் கருணாநிதி கேள்வி எழுப்பிவிட்டார்.

புலிகள் இயக்கத்தை ஆதரிக்கும் அல்லது தொடர்ந்து அவ் இயக்கத்துடன் தொடர்புகளை வைத்திருக்கும் எந்த ஒரு தனிநபரையும் அல்லது குழுவையும் கைது செய்வதற்கான அதிகாரத்தை புலிகள் மீதான தடை அதிகாரிகளுக்கு வழங்கி இருக்கிறது.

இத்தகைய உணர்ச்சி பூர்வமான விவகாரங்களில் ஐக்கியப்பட்ட நடவடிக்கைகள் தேவை என கட்சிகளின் தலைவர்கள் உத்தியோக பூர்வமற்ற சந்திப்புக்களின் போது இணங்கிக் கொண்டுள்ளனர்.

அத்துடன் ஏற்கனவே உஷாருடப்பட்டிருக்கும் தமிழக அரசியல் சூழ்நிலை அ. தி. மு. க அரசுக்கு எதிராக முழு அளவிலான அரசியல் தாக்குதல் ஒன்றை நடாத்துவதற்கு ஏதுவாக அமையும் எனவும் தலைவர்கள் கருதுகின்றனர்.

அத்துடன் எதிர்வரும் ஜூன் 12 இல் காவிரி ஆறு நீரும் திறந்து விடப்படவேண்டும் என தமிழக எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்து போராட்டம் நடத்ததிட்டமிடுகின்றன.

மொத்தத்தில் தமிழக எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஜெயலலிதா அரசுக்கு எதிராக அடுத்த சுற்று போராட்டத்தில் இறங்குவதற்காக தயாராகிக் கொண்டிருக்கின்றன.

அமெரிக்கா—இந்தியா

## திட்டமிட்டபடி கூட்டு ஒத்திகைக்கு ஏற்பாடு

(டில்லி)

இந்தியாவும் அமெரிக்காவும் திட்டமிட்டபடி கடற்படைக் கூட்டு ஒத்திகையை வியாழன், வெள்ளிய கிய இருபத்தி நான்கு மணி நேரம் இடம் பெறும் இத்தக் கடற்படை ஒத்திகையில், அமெரிக்காவின் இரு யுத்தக் கப்பல்களும், இந்தியாவின்

## பிடல் றாமோஸ் முன்னணியில்

[மணிலா]

தாய்லாந்து

## இடைக்கால பிரதமராக மீசாய் நியமனமாகலாம்?

[பாங்கொக்]

தாய்லந்து அரசின் இடைக்காலப் பிரதமராக தற்போதைய பிரதிப் பிரதமர் மீசாய் ருசுபென் நியமிக்கப்படலாம் என்று பாங்கொக்கில் ஹேஸ்யம் கூறப்படுகின்றது. புதியதொரு அரசாங்கம் அமைவதற்கு மேலும் இருவாரங்கள் வரை நீடிக்கும் எனவும் கூறப்படுகிறது.

இதனிடையே பதவியிலிருந்து வெளியேறிய பிரதமர் சுசிண்டா அவரது மைத்துனர் ராணுவத் தளபதி இச ராபொங் சான்படி, இரேஷ்டாமாண்டரும் விமானப் படைத் தளபதியுமான கசட் ரஜனன் ஆகியோர், கொலைக் குற்றச்சாட்டுகளின் கீழ் விசாரிக்கப்பட வேண்டுமென்று பல அங்கத்தவர்கள் தெரிவித்தனர்.

## மனத்துப்பரவாகஇருக்கிறது அதனால்பலமாக உள்ளேன்

### - ஆசிப் அலி சர்தாரி

(இஸ்லாமாபாத்)

எனது மனம் துப்பரவாக இருப்பதால் நான் பலமாகக் காணப்படுகின்றேன் பூட்டோவின் மகள் பெனாசிரின் கணவனாக இருப்பதால் தூக்கிலிடப்பட்ட பூட்டோவின் மருமகனாக இருப்பதால் என்னையும் தூக்கிலிடப் பார்க்கிறார்கள். இவ்வாறு பாகிஸ்தான் பாராளுமன்ற உறுப்பினரான ஆசிப்அலி சர்தாரி சபையில் தெரிவித்தார்.

பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவியான பெனாசிர் பூட்டோவின் கணவரான ஆசிப் அலிசர்தாரி கடந்த இருபது மாதங்களாக சிறையில் இருந்து வருகின்றார். கொலைக் குற்றச்சாட்டு ஒன்றின் கீழ் இவர் சிறைவைக்கப்பட்டது தெரிந்ததே. சிறையில் இருந்தபடியே தேர்தலில் வென்ற அவர் பட்ஜெட் விவாதத்தில் கலந்து கொள்வதற்காக இருவாரங்களுக்கு வெளியே வந்துள்ளார்.

சபையில் அவர் பேசுகையில் மேலும் சிறை வாழ்க்கை தன்னை மிகவும் பலப்படுத்தியிருப்பதாக தெரிவித்ததோடு தூக்கிலிடப்படுவதற்கும் தான் தயங்கவில்லை எனவும் குறிப்பிட்டார். எனினும் எந்தக் கொலைக் குற்றத்தையும் தான் இழைக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

## இரண்டாம் தடவையாக

சற்று முன்னேற்றம் காணப்படுவதாகத் தோன்றி துள்ளது.

ஆனால், உண்மையில் அவ்வாறான நிலை இல்லை. சிறிலங்கா அரசாங்கம் படுகொலைகளுக்கு சட்டபூர்வமான விளக்கம் கொடுத்து அமெரிக்கா போன்ற நாடுகளைத் திருப்திப்படுத்த முற்பட்டுள்ளது. ஆனால் படுகொலைகள் எந்தவிதத்திலும் குறையவில்லை. மனித உரிமை மீறல்களும் நிறுத்தப்படவுமில்லை. அத்துலத்முதலி கமிசன் தொடக்கம் ஜயவர்த்தன கமிசன் வரை குற்றவாளிகள் எவரும் தண்டிக்கப்படவில்லை. இதனால், தொடர்ந்து வரும் படுகொலைகளுக்கு வரம்பு போடப்படவுமில்லை.

இந்நிலையிலேயே இறுதியாக வற்றாப்பளை கண்ணகை அம்மன் திருவிழாவில் நடந்த படுகொலை தொடர்பாக விசாரிக்க கமிசன் அமைக்கப்பட்டுள்ளது. இக்கமிசனோ வற்றாப்பளை சம்பவம் நடந்த இடத்திற்குச் செல்லாமல் விசாரணை மேற்கொள்ள முற்பட்டுள்ளது. கொக்கட்டிச்சோலைப் படுகொலை தொடர்பாக நடைபெற்ற விசாரணையின்போது கமிசன் நேரடியாகத் தளத்திற்குச் சென்றது ஆனால் அக்கமிசனே உண்மை நிலைவரத்தைக் கண்டபீடு செய்யவில்லை. படுகொலை செய்யப்பட்டவர்கள் 61 பேர்களே எனக் கமிசன் தெரிவித்தது. ஆனால், இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள் / காணாமற் போனவர்கள் நூறுக்கு மேல் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும், படுகொலையில் ஈடுபட்ட இராணுவத்தினரை விசாரணைக் கமிசன் முன் கொண்டுவர அவர்களால் முடியவில்லை ஒப்புக்கு லெப்ரினன்ட் தரத்திலுள்ள ஒரு அதிகாரி மட்டுமே கமிசன் முன் தோன்றி சத்தியப் பிரமாணம் செய்யாமல் வாக்குமூலம் அளித்தார்.

படுகொலையில் ஈடுபட்ட இராணுவத்தின் மீது விசாரணை முடிவும் பாரிய குற்றச்சாட்டுக்களைச் சுமத்தவில்லை.

இந்நிலையில் களத்திற்குச் செல்லாமல் விசாரணை மேற்கொள்ளும் வற்றாப்பளை விசாரணைக் கமிசனிடம் இருந்து நல்லமுடிவை எவ்வாறு எதிர்பார்க்க முடியும். களத்திற்குச் செல்லாமல் சம்பவத்தை நேரில் கண்ட மக்களிடம் எவ்வாறு கமிசன் விசாரணையை நடத்தப் போகிறது? மேலும், சம்பவத்தில் காயப்பட்ட அனைவரும் யாழ். போதனா வைத்தியசாலையிலேயே அனுமதிக்கப்பட்டுள்ளனர் இந்நிலையில் எவ்வாறு அவர்களிடம் வாக்குமூலம் பெறப் போகின்றது?

இவற்றை நோக்கும்போது வற்றாப்பளை அம்மன் கோவில் படுகொலை தொடர்பாக மேற்கொள்ளப்படும் விசாரணையும் ஒரு கண்துடைப்பாகவே இருக்கும். இவ்விசாரணையும் பழைய விசாரணைக் கமிசன்களின் தீர்ப்புப் போன்று ஒருதலைப்பட்சமானதாக, கொலைகளுக்கு நியாயம் கற்பிக்கும் ஒன்றாகவே இருக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை.

---

...டைக் கூட்டு ஒத்திகையை வியாழன், வெள்ளியாகிய இரு நாட்களில் இந்தியக் கடற் பிராந்தியத்தில் நடத்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் இரு யுத்தக் கப்பல்களும், இந்தியாவின் இரு யுத்தக் கப்பல்களும் சுமார் 500 கப்பற் படையினரும் இந்த ஒத்திகையில் கலந்து கொள்வர்.

## ராஜீவ் கொலை வழக்கில் 1,300 பேர் சாட்சிகள்

(டில்லி)

ராஜீவ்காந்தி கொலைவழக்கில் சோனியாகாந்தி உட்பட 1,300பேர்சாட்சிகளாகக்குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சோனியாகாந்தி ஒரு சாட்சியாகக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அவர்சாட்சியமளிப்பதும் விடுவதும் அவரது சொந்த விருப்பம் என இந்திய புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## இராமர் ஆலயம் கட்ட சட்டம் கொண்டுவரப்படும்

### -கல்யாண் சிங்

(டில்லி)

அயோத்தியில் இராமர் ஜென்மபூமி - பாபர் மசூதி தாவாவிற்கு சுமுகமான தீர்வு ஒன்றைக் காண படாவிட்டால் அங்கு சிறிஇராமர் ஆலயத்தைக் கட்டுவதற்கு தேவையான சட்ட முன்மொழிவு ஒன்றைக் கொண்டு வருவதற்கு தமது அரசு தயங்காது என்று உத்தரப்பிரதேச மாநில முதல்வர் கல்யாண்சிங் கூறியுள்ளார்.

மேமாறியில் பாரதிய ஜனதாக்கட்சியின் ஆதரவிலான விவசாயிகள் பேரணி ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்விதம் தெரிவித்தார்.

## இந்திய - பாகிஸ்தான் பேச்சுகள் ஒத்திவைப்பு

(டில்லி)

இந்தியவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் நடக்க இருந்த பேச்சுவார்த்தைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இந்தியர் ஜஜேந்திரி ராஜேஸ் மித்தல் பாகிஸ்தான் உளவுத்துறையினரால் கடத்தப்பட்டு தாக்கப்பட்டது தொடர்பாக இரு நாடுகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள விரிசல் காரணமாகவே பேச்சுவார்த்தைகள் பிற்போடப்பட்டுள்ளன.

மித்தல் தாக்கப்பட்டது குறித்துப் பாகிஸ்தான் இதுவரை எந்தவித விளக்கமும் தரவில்லை என்றும், வருத்தம் தெரிவிக்கவில்லை என்றும் இந்திய அரசு தரப்பில் கூறப்படுகிறது.

மித்தலின் உடல் நிலை இன்னமும் மோசமான நிலையில் உள்ளது என்றும், அவரை விசேஷ விமானம் ஒன்றில் ஏற்றி இஸ்லாமாபாத்திலிருந்து இந்தியாவுக்கு அனுப்பி வைக்கும்படி பாகிஸ்தானை இந்திய அரசு கேட்டிருக்கிறது என்று இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

---

[மணிலா]

பிலிப்பைன்சில் நடந்த பொதுத் தேர்தலின் வாக்கு எண்ணிக்கை முடியும் நிலையில் உள்ளது.

தற்போதைய நிலைவரப்படி அந்நாட்டின் முன்னாள் இராணுவ அமைச்சர் பிடல் றமோஸ் முதலிடத்திலும் முன்னாள் நீதிபதி மரியம் சந்தியாக்கோ இரண்டாம் இடத்திலும் உள்ளனர். இவர்கள் இருவருக்கும் இடையில் உள்ள வாக்கு வித்தியாசம் பத்து லட்சத்தையும் தாண்டியுள்ளது.

புறட்டஸ்தாந் கிறிஸ்வதரான றமோஸ் ஜனாதிபதியாவதற்குத் தான் நல்லாசி வழங்குவதாக மணிலாவின் கத்தோலிக்க சமயப் பேராயர் கருதினால்சிங் கூறினார்.

## இரு நாடுகளிலும் பூகம்பங்கள்

(டில்லி)

புதுடில்லிக்கு வடக்கே 450 மைல் தூரத்திலுள்ள ஹிமாலயப்பகுதியில் நேற்று முன்தினம் பூமிநடுக்கம் ஏற்பட்டது உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை.

இதே போன்று பாகிஸ்தான் வடபகுதியிலும் பூமிநடுக்கம் ஏற்பட்டது. லாகூரிலும் பேஷாவார் எல்லைப் புறத்திலும் இதனால் சேதங்கள் ஏற்பட்டன உயிர்ச்சேதம் பற்றி அறிவிக்கப்படவில்லை.

## வெள்ளத்துக்கு 42 பேர் பலி

கடந்த வாரத்தில் ஈரானில் ஏற்பட்ட பெருவெள்ளத்துக்கு 42 பேர் பலியாகினர். இந்த வெள்ளத்தால் ஈரான் முழுவதும் 14 கோடி டொலர் வரையிலான சேதம் ஏற்பட்டுள்ளது.

இவ் வெள்ளத்தால் 7 000 வீடுகள் அழிந்துள்ளன ஈரானின் 24 மாகாணங்களில் 17 மாகாணங்களிலேயே இந்த அழிவு ஏற்பட்டுள்ளது.

---

...ந்து வருகின்றார். கொனைக் ... வும் தெரிவித்தார்.

## இரண்டாம் தடவையாக பதவிக்குபோட்டியிடவில்லை

### - யெல்சின் அறிவிப்பு

[மாஸ்கோ]

ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்சின் இரண்டாவது தடவையும் தாம் பதவிக்குப் போட்டியிடப் போவதில்லை என்று கூறியுள்ளார். தமது பதவிக்காலம் முடிவடைந்ததும் அதிலிருந்து விலகிவிடப் போவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

மங்கோலிய எல்லைக்கு அருகிலுள்ள நகரமொன்றில் தொழிலாளர்களைச் சந்தித்துப் பேசும் நிகழ்ச்சியொன்றில் அவர் இதனை அறிவித்தார். இருந்தும் கடும் பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்காகத் தொடர்ந்து போராடப் போவதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் உடல்நிலை சீரமற்று இருப்பதாக அல்லது அதிகளவு மதுபானங்களை அவர் பயன்படுத்துவதாக வெளிவந்த வதந்திகளையும் அவர் நிராகரித்தார்.

## மின் உற்பத்தி ஆலை தனியாருக்கு ஊக்குவிப்பு

கர்நாடக மாநிலத்தில் தனியார் துறையில் மின் உற்பத்தி ஆலைகளை அமைக்கும் பொருட்டு முதலீட்டாளர்களைக் கவருவதற்காக மாநில அரசு அதிகாரிகள் இத்தாலி அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்ய உள்ளனர்.

நேற்று முன்தினம் செய்தியாளர்களிடையே பேசிய அம்மாநில முதல்வர் பங்காரப்பா மேலும் கூறுகையில். இவ் ஆண்டு முடிவடைவதற்குள் மேலும் நாலாயிரம் கோடி ரூபா செலவில் மின் உற்பத்தியில் தன்னிறைவு காணப்படும் என்று தெரிவித்தார்.

## பத்திரிகையாளரிடம் உதவிகோரும் ஆந்திர அரசு

(விஜயவாடா)

ஆந்திரப் பிரதேசத்தில் நக்ஸலைட்டுக்களை ஒடுக்குவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிடுமாறு ஆந்திரப் பிரதேசமாநில அரசாங்கம் பத்திரிகைத்துறையினருக்கு அழைப்பு விடுத்துள்ளது.

முன்னதாக பெங்களூரில் செய்தியாளரிடையே பேசிய ஆந்திர முதல்வர் ஜனார்த்தன ரெட்டி நக்ஸலைட் மக்கள் போர்க்குழு மீதான தடை நடவடிக்கை. மாநிலத்தின் நக்ஸலைட் அபாயத்தில் இருந்து விடுபடுவதான முதலாவது முயற்சி ஆகும் என்றார்.

பத்திரிகைத் துறையினர் செய்திகளை வெளியிடுமாறும் அதற்கான கருத்துக்களை தெரிவிக்க வேண்டாமெனவும் கேட்டுக் கொண்டார்.

மேலும் இதுவரையில் 4,000 நக்ஸலைட்டுக்கள் ஆந்திரத்தில் சரணடைந்துள்ளனர் எனவும் தெரிவித்தார்.

11 JUN 1992

ஈழநாதம்

# தமிழிற்காக தன்னை அர்ப்பணித்த சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டுவிழாவில் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

"தமிழிற்காகவே தன்னை அர்ப்பணித்தவர் சுவாமி விபுலானந்தர் இவர் தமிழ்விஞ்ஞானம் தொடர்பாக தமிழ் சமூகங்களின் அறிவூட்டலுக்கு உழைத்தவர்" இவ்வாறு யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியின் தமிழ்ப் பேரவையினால் கல்லூரி விவேகானந்த மண்டபத்தில் நடாத்தப்பட்ட மூத்த தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய பண்டிதர் திரு. க. சச்சிதானந்தன் குறிப்பிட்டார்.

இவ்விழா நேற்றுக் காலை 9.45 மணியளவில் ஆரம்பமாகியது இவ்விழாவில் சுவாமி விபுலானந்தரின் ஆராய்ச்சி உதவியாளராக பணிபுரிந்த பண்டிதர் திரு க. சச்சிதானந்தன் "நான் கண்ட விபுலானந்தர்" என்னும் தலைப்பில் உரையாற்றும் போது மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்தார்.

இந் நிகழ்ச்சி யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் சி.சிவசரவணபவன் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவின் சிறப்பு நிகழ்ச்சிகளாக சுவாமிகளின் படைப்புக்களில் ஒன்றான "மதங்கசூளாமணி" எனும் நூலின் உள்ளடக்கம் பற்றி கலைப்பேரரசு ஏ.ரி பொன்னுத்துரை அவர்களின் சொற்பொழிவு நடைபெற்றது.

அதனை அடுத்து யாழ் இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, வைத்தீஸ்வராக் கல்லூரி, புனித பத்திரிசியார் கல்லூரி ஆகியவை இணைந்து "எங்கும் விபுலானந்தர் என்பதே பேச்சு" எனும் கருத்தரங்கு சிறப்புற நிகழ்த்தப்பட்டது. தொடர்ந்து கலைநிகழ்ச்சிகளாக நடனம், வில்லிசை ஆகியன இடம்பெற்றன (பா)

## விசேட விமானம் இறங்க பாகிஸ். அனுமதி மறுப்பு

(டில்லி)

புலனாய்வு அதிகாரிகளால் தாக்கப்பட்ட இந்திய ராஜதந்திரியான ராஜேஷ் மித்தலை அழைத்து வருவதற்கு விசேட மருத்துவர் குழுவொன்றுடன் இந்திய அரசு அனுப்பவிருந்த விசேட விமானம் தரையிறங்குவதற்கு இஸ்லாமாபாத் அனுமதி மறுத்துள்ளது.

இதேவேளை இராணுவ விமானம் எதையும் பாகிஸ்தான் தனது நாட்டில் தரையிறங்க அனுமதிக்கமாட்டாதெனவும், இந்திய சிவில் விமானமொன்றை அனுப்பினால் தரையிறங்க அனுமதிக்கப்படும் எனவும் பாகிஸ்தான் தரப்பில் பதிலளிக்கப்பட்டுள்ளது.

ராஜேஷ் மித்தல்மோசமான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதால் சாதாரண வர்த்தக விமானங்களில் அவர் பயணம் செய்ய முடியாது எனக் கூறியே விசேட விமானத்தை அனுப்ப புதுடில்லி ஏற்பாடு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## கல்வி வளர்ச்சிக் கழகம் ஆரம்பம்

(வவுனியா)

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் இரணை இலுப்பைக் குளம் பகுதியில் கல்வி வளர்ச்சிக்கழகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டு கல்வியைத் தொடரமுடியாத மாணவர்களும், வறுமையினால் துன்பப்படும் மாணவர்களும் இந்தக் கல்வி வளர்ச்சிக் கழகத்தில் கல்வி பயின்று வருகின்றனர்.

தேர்ந்த ஆசிரியர்கள் இங்கு கல்வி கற்பித்து வருகின்றனர்.

சுமார் 125 மாணவர்கள் இங்கு கல்வி கற்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. [தி]

## சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு போட்டிகள்

(பருத்தித்துறை)

யாழ். மாவட்டத்தில் உலக சூழல் பாதுகாப்பு தினத்தையொட்டி சூழல் பாதுகாப்பு சம்பந்தமான போட்டிகளை நடாத்துவதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட சூழல் பாதுகாப்பு அதிகார சபையும், மகளிர் அபிவிருத்திக் கழகமும் இணைந்து மேற்கொண்டுள்ளன. சன சமூக நிலையங்களின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இச் சூழல் பாதுகாப்புச் சம்பந்தமான போட்டிகளிலே சூழல் பாதுகாப்புச் சம்பந்தமான சுவரொட்டிப்போட்டிகள், பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் வினாவிடைப்போட்டிகள் என்பன இடம் பெறவுள்ளன. இப் போட்டிகள் பாடசாலைகள் மட்டத்திலும் சன சமூகநிலையங்களின் சமாசங்கள் மட்டத்திலும் நடைபெறவுள்ளதாக யாழ் மாவட்ட சூழல் பாதுகாப்பு அதிகார சபைச் செயலாளர் அறிவித்துள்ளார், (25)

# தமிழர்களின் போராட்டம் இந்திய ஆதிக்கத்திற்கு சவால்

-மு.திருநாவுக்கரசு

(யாழ்ப்பாணம்)

"இந்தியாவின் பிராந்திய ஆதிக்கத்துக்கு ஏற்பட்ட சவாலாகவே இந்தியா இலங்கையின் தமிழர்போராட்டத்தைக் கருதுகிறது. இந்தியாவின் இன்றைய பிரதான பிரச்சினை விடுதலைப்புலிகள் தான்" இவ்வாறு நேற்று மாலை யாழ் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறை மாணவன் பிரபாகரனின் மூன்றாம் ஆண்டு நினைவாக நினைவுரை நிகழ்த்திய திரு. மு.திருநாவுக்கரசு கூறினார் "இனப் பிரச்சினையை ஆட்சியாளர்கள் கையாண்டவிதமும் அதனால் உபகண்டத்தில் ஏற்பட்ட மாற்றங்களும்" என்ற தலைப்பில் நடைபெற்ற நினைவுரையில் அவர் தொடர்ந்து கூறும்போது இலங்கையின் இனப்பிரச்சினையின் தன்மைகளை விளங்கிக்கொள்ளத் தவறிய இந்திய அரசு இப் பிரச்சினையை தமிழர்களது பிரச்சினையாக கருதாமல் புலிகளின் பிரச்சினையாக கருதியது இதனால் விடுதலைப்புலிகளை அழித்து விடுவதால் பிரச்சினையை தீர்க்க முடியும் என எண்ணியது இதற்காகவே இந்திய இராணுவம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டது இம் முயற்சி தோல்வியில் முடிவடைந்தது இவ்வாறே தமிழர் பிரச்சினையை அணுகிய அனைத்து சக்திகளது அணுகுமுறைகளும் தமிழர்களது பிரச்சினையின் அடித்தளத்தைக் கொண்டிருக்கவில்லை.

இலங்கைத் தமிழர்பிரச்சினை கடந்த பதினைந்து ஆண்டுகளாக ஆட்சியாளர்களாலும் அன்னிய சக்திகளாலும் எவ்வாறு அணுகப்பட்டது என்றும் தமிழர் பிரச்சினையை இவ்வாறான சக்திகள் தமது நெடுநோக்கான அரசியல் நோக்கங்களுக்காக எவ்வாறு பயன்படுத்திக் கொண்டனர் என்றும் குறுகியநேர இடைவெளியில் மிகவும் விளக்கமாகவும் சுவாரசியமாகவும் எடுத்து விளக்கியதுடன் தமிழர் பிரச்சினை தீர்க்கப்படுவதற்காக எவரும் அதை அணுகவில்லை என்ற சோகமான சிலஅம்சங்களையும் சுட்டிக்காட்டினார்.

## விமானத்தினுள்

லங்காட்ரைஸ்டார்" விமானத்தில் திங்கள் அதிகாலை 12-27மணிக்குகட்டுநாயக்காவிலிருந்து ஜப்பான் நோக்கி பயணமானார்கள்.

சுமார் ஒரு மணிநேரம் சென்றதும் ஜப்பானியர்கள் ரகளையில் ஈடுபடத் தொடங்கினர். ஜப்பானிலிருந்து இவ்விமானத்தை திரும்ப ஓட்டிவருவதற்கான பணி ஒப்படைக்கப்பட்டிருந்த மேலதிக விமான ஊழியர்கள் விமானத்தின் முதலாம்தர இருக்கையில் அமர்ந்திருந்ததை ஜப்பானியர்கள் கடுமையாக ஆட்சேபித்தனர். மிகவும் தகாத வார்த்தைகளைப் பேசிய அவர்கள் அந்த இரு மேலதிக ஊழியர்களும் முதலாம் தர இருக்கையில அமர்ந்திருக்க அனுமதிக்கப்பட்ட காரணத்தைக் கப்டன் தங்களிடம் எழுத்தில் தரவேண்டும் என்ற கோரிக்கை விட்டனர்.

ஜப்பானின் நகோயாவில் விமானம் தரையிறங்கியதும் அவ்வாறு விளக்கத்தை தருவதாக கடமையில் இருந்த விமான ஊழியர்களும் கப்டனும் உறுதி அளித்தபோதும் அதற்கு அவர்கள் மறுத்து குழப்பம் விளைவித்தனர்.

இதனை அடுத்து அதிகாலை 3 மணிக்கு அதுமீண்டும் கட்டுநாயக்காவில் தரையிறக்கப்பட்டது.

## இசைக்கூத்து மேடையேற்றம்

யாழ் மத்தி றொட்டறக்ட் கழக ஆதரவுடன் மாநகராட்சி மன்ற சுகாதாரப் பிரிவினரால் தயாரிக்கப்பட்ட இசைக்கூத்து இன்று மாலை 5 00 மணிக்கு யாழ் பரியோவான் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

போர்க்கால சூழலினால் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளையும் அதனைத்தீர்க்கும் வழிவகைகளையும் மக்களுக்கு எடுத்துக்காட்டும் முயற்சியாக இவ்விசைக்கூத்து அமைகிறது

இவ்விசைக்கூத்து ஆனி 12ஆம் திகதிவரை யாழ் மாவட்ட பாடசாலைகளிலும் கிராமங்களிலும் மேடையேற்றப்படவுள்ளது

இதனை மேடையேற்ற விரும்புவோர் யாழ் நகர மத்தி றொட்டறக்ட் கழகத்துடனோ அல்லது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துடனோ தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## யாழ்

எடுத்து வருவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார் பெரும்பாலும் அடுத்தவாரம் அளவில் ஜீப் வண்டி இங்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது (ச)

## முஸ்லிம்கள்

இவ்வேளை நாம் நித்திரையில் இருந்தபோது அயல்வீடுகளில் அவலக்குரல்கள் கேட்டன இதனைத்தொடர்ந்து நாமும் எழுந்து வெளியே ஓடிவந்தபோது சிவில் உடைதரித்த சிலர் கையில் கூரிய ஆயுதங்களுடன் நின்று ஓடி ஓடி வெட்டினார்கள். அயலவர்கள் "முஸ்லிம்கள் வெட்டுகிறார்கள் ஓடுங்கள்" எனக் கூறிக்கொண்டு ஓடினார்கள். அதனால் நாமும் ஓடியபோது அவர்கள் எம்மை 'ஓடாதீர்கள் ஓடினால் கலைத்து வெட்டுவோம்'' என எச்சரித்தனர். அதனால் பயத்தில் நாம் நின்றபோது எம்மைச் சூழ்ந்து கொண்ட சிலர் கத்திகளினாலும், வாளினாலும் மாறிமாறி

## நியாயப்படுத்த

அனுப்பி வைத்தது இப் பிரிவினர் காலை 10 30 மணியளவில் செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் கேயிலை சென்றடைந்து தமது கடமையினை தொடங்கினர் இந்தக் குழுவில் இரு வைத்தியர்கள், இரு தாதிமார், ஆறு தொண்டர்கள் அடங்குவர். இவர்கள் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் பகல் சுமார் 12 30 மணி அளவில் முதலாவது எறிகணைத் தாக்குதல்

## வடக்கு - கிழக்கு

சிறிலங்காவுக்குக் கடன் வழங்குவது அதிகரித்து வருகிறது 1981 ஆம் ஆண்டு சிறிலங்கா பெற்ற வெளிநாட்டுதவி 8 208 கோடி ரூபா மட்டுமே. ஆனால் 1990 இல் சிறிலங்கா அரசு பெற்ற வெளிநாட்டு உதவி 23 247 கோடி ரூபா எனப்படுகிறது.


யாழ். பல்கலைக் கழகம்

மகாபொல கொடுப்பனவு

5ஆம், 6ஆம்

தவணைப் பணங்கள்

மேற்படி கொடுப்பனவுக்கான ஒழுங்குகள் பின்வருமாறு செய்யப்பட்டுள்ளது.

முதலாம் வருடம் (1-6 தவணைப்பணங்கள்)

மருத்துவ பீடம்
கலைப்பிரிவு
வர்த்தகப் பிரிவு
வியாபார நிர்வாகப்பிரிவு
உயிரியல்விஞ்ஞானப்பிரிவு
பௌதீகவிஞ்ஞானப் பிரிவு

28-05-92-9 00-12 00மு.ப
01-06-92 9 00-12 00மு ப
03-06-92-9 00-12.00மு.ப

இரண்டாம் வருடம்




தவறி விட்டது

நேற்று மாலை மானிப்பாய் வெஸ்லி தியேட்டரில் 85 ஸ்ரீ 5552 இலக்கமுடைய C G 125 மோட்டார் சைக்கிளின் ஆவணமும் ஒரு டயறியும் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் வெஸ்லி தியேட்டர் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (2606)



3ஆம் ஆண்டு

கண்ணீர் அஞ்சலிகள்



### இரண்டாம் வருடம்

| | |
|---|---|
| மருத்துவ பீடம் | |
| கலைப்பிரிவு | 28-05-92 1 30-3 00 பி.ப |
| வர்த்தகப்பிரிவு | 01-06-92 1 30-3.00 பி.ப |
| வியாபார நிர்வாகப்பிரிவு | 03-06-92 1 30-300 பி.ப |
| உயிரியல் விஞ்ஞானப்பிரிவு | |
| பௌதீக விஞ்ஞானப்பிரிவு | |

### மூன்றாம் வருடம்

| | |
|---|---|
| மருத்துவ பீடம் | |
| கலைப்பிரிவு | 29.05 92 9.00-12 00 மு.ப |
| வர்த்தகப் பிரிவு | 02 06 92 9 00-12 00மு.ப |
| வியாபார நிர்வாகப் பிரிவு | 04.06.92 9 00-12.00மு.ப |
| உயிரியல் விஞ்ஞானப்பிரிவு | |
| பௌதீக விஞ்ஞானப்பிரிவு | |

### நான்காம் வருடம்

| | |
|---|---|
| மருத்துவபீடம் (4ம், 5ம் வருடங்கள்) | |
| கலைப்பிரிவு | 29 05 92 1 30-3.00 பி.ப |
| வர்த்தகப்பிரிவு | 02 06 92 1-30-3 00 பி.ப |
| வியாபார நிர்வாகப்பிரிவு | 04.06.92 1.30-3 00 பி.ப |
| உயிரியல் விஞ்ஞானப்பிரிவு | |
| பௌதிக விஞ்ஞானப்பிரிவு | |

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை

பதிவாளர்

(சி/4474)

## நினைவூட்டுகிறோம்

மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பெறப்பட்ட நிரந்தர போக்கு வரத்து அனுமதி அட்டைகள் யாவும் இம்மாதம் 31 ஆம் திகதி வரையுமே செல்லுபடியாகும். மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள போக்கு வரத்து அனுமதி வழங்கும் காரியாலயத்தை நாடவும்.

[சி-4421]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு மேமாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வது எறிகணைத் தாக்குதல் நடைபெற்றது. கோயிலடியில் ஏற்பட்ட இச் சம்பவத்தால் பக்தர்கள் நாலா பக்கமும் சிதறி ஓடத் தொடங்கினர். முதலாவது எறிகணையைத் தொடர்ந்து செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் தமது சீருடைகளுடன் வெளியில் வந்து நின்று வாகனச் சமிக்ஞை வெளிச்சத்தையும் போட்டனர். செஞ்சிலுவைச் சங்கக் கொடியும் ஏற்றப்பட்டிருந்தது எனினும் ஒரு சில நிமிடநேர வித்தியாசங்களில் தொடர்ந்து மேலும் மூன்று எறிகணைகள் கோயில் பகுதியில் வந்து விழுந்து வெடித்தன. இதனால் 25 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் இறந்தும் நாற்பதுக்கும் மேற்பட்ட மக்கள் காயமடைந்தும் உள்ளனர். செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களும், வைத்தியர்களும் காயப்பட்டவர்களுக்கு முதலுதவிச் சிகிச்சை செய்து பொதுமக்களின் உதவியுடன் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். பாரிய காயம் அடைந்தவர்களில் சிலர் வைத்தியசாலைக்குக் கொண்டு வரும் வழியிலும், வைத்திய சாலையிலும் இறந்துள்ளனர். இறந்தவர்கள், காயப்பட்டவர்கள் அனைவரும் கோயில் கும்பிட வந்த பொதுமக்களே ஆவர். செஞ்சிலுவைச் சங்க முல்லைத்தீவுப் பிரிவுப் பொருளாளர் திரு. க. சண்முகலிங்கம், சுகாதாரத் தொண்டர் செல்வன் றஸி நிமால் என்பவரும் இந்த அசம்பாவிதத்தில் இறந்துள்ளனர். எமது வைத்தியப் பிரிவுத் தாதி செல்வி சாந்தினிதேவி அவர்கள் பாரிய காயத்திற்குள்ளாகி யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வாகனச் சாரதி திரு. ம. அந்தோனிப்பிள்ளை காயத்துக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வருகிறார். செஞ்சிலுவைச் சங்க வாகனமும் சேதம் அடைந்து உள்ளது.

லும், வாளினாலும் மாறிமாறி வெட்டினர். அதன்பின் அவர்கள் தப்பி ஓடிக் கொண்டிருந்தவர்களைத் துரத்தித் துரத்தி வெட்டினார்கள். நான் வீழ்ந்து கிடந்த போது என அருகிலும் பலர் துடித்துக் கொண்டிருந்தனர். சிலமணி நேரத்தின் பின் நாங்கள் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டு முதலில் பொலநறுவ மருத்துவ மனையிலும் பின்னர் கொழும்பு வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டோம்.

ஆண்களில் அனேகர் தப்பி ஓடிவிட்டதால் குழந்தைகள், சிறுவர்கள், பெண்களே இவர்களின் வெட்டுகளுக்கு இலக்காகியதாகக் கூறும் அப்பெண்மணி காயமடைந்து அங்கு சிகிச்சை பெற்று வருபவர்களின் உறவினர்கள் எவரும் இன்றுவரை வந்து தம்மைப் பார்வையிடவில்லை எனவும் அவர்களுக்கு தாங்கள் எந்த வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டிருக்கிறோம் என்பது பற்றி தெரிந்திருக்க முடியாது எனக் கூறியதுடன் தமது குடும்பத்தினர் உயிருடன் இருக்கிறார்களா என்பதைக்கூட இதுவரை தம்மால் அறிந்து கொள்ள முடியாதிருப்பதாக வேதனையுடன் கூறினார்.

நாளாந்தம் பல பொது மக்கள் தம்மை வந்து பார்வையிடுவதுடன் தமக்குத் தேவையான உணவு மற்றும் உடு புடைவைகளை தந்துதவுவதாகவும் அவர் கூறினார்.

(ச)

### இந்தியாவின்

வாக எடுத்துக் காட்டியுள்ளது. ராஜீவ்காந்தியின் விவேகமற்ற அணுகுமுறையில் ஏற்பட்ட அனுபவங்களிலிருந்தாவது டில்லி அரசு பாடம் கற்றுக்கொண்டால் எதிர்காலத்திலாவது அவமானப்படுவதை இந்தியா தவிர்த்துக் கொள்ளலாம்'' எனவும் இப்பத்திரிகை கூறுகிறது.

என்படுகிறது.

1981 இல் 8,208 கோடி ரூபா கடன் பெற்றபோது 1 100 கோடி ரூபா மட்டுமே இராணுவத்துக்கு ஒதுக்கியது அதாவது தான் பெற்ற உதவி அளவில சுமார் 12 சத விகிதத்தை அரசு பாதுகாப்புக்குச் செலவு செய்தது.

1990 ஆம் ஆண்டில் 23,247 கோடி ரூபாவை சிறிலங்கா வெளிநாட்டு உதவியாகப் பெற்ற போதிலும் சுமார் 14 600 கோடி ரூபாவை அரசு தனது இராணுவத்திற்குச் செலவிட்டது அதாவது உதவியில் 60 சத விகிதத்திற்கு மேல் இராணுவத்துக்குச் செலவு செய்தது.

வெளிநாட்டு உதவிகள் அதிகரித்த போதிலும் சிறிலங்காவின் வளர்ச்சித் திட்டம் பாதிக்கப்படுவது, அரசு அதிகமான பணத்தை இராணுவத்துக்குச் செலவிடுவதே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. ஆகவே போர் ஒழிந்தால் அல்லாமல் இராணுவச் செலவு குறையாது என்று அவதானிகள் கூறுகின்றார்கள்.

### திருக்கோணமலை

ணுவத்தால் அடிக்கடி கைது செய்யப்படுவதால் மாணவர்கள் பாடசாலைக்கு செல்ல அஞ்சுகின்றனர்.

கடந்த 21ஆம் திகதி திருமலை மூதூரில் இருந்து திருமலை நகர் பகுதிக்குச் சென்ற மாணிக்கராசா குமரராஜ் (வயது 22 7ம் வட்டாரம் சேனையூர்) என்னும் மாணவன் துறைமுகத்தில் வைத்து சிறிலங்கா பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டார்.

இதேதினம் மூதூர், சம்பூர் என்னும் இடத்தில் வைத்து கிருஷ்ணபிள்ளை ராஜேஸ்வரன் [வயது 20, 5ஆம் வட்டாரம் சம்பூர்] என்னும் மாணவன் சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டார்.



## செல்லத்துரை கிறிஸ்தோப்பர்
## (காணிக்கை)

பிறப்பு: 22-3-1953

துரோகிகளால் அழிப்பு: 28-5-1989

அன்புத் தெய்வமே அப்பா! ''உங்களை கொடியவர் அழித்தார்கள்'' ஆனால் அப்பா எமது கொள்கையை இலட்சியத்தை அவர்களால் அழிக்கமுடியாது - அப்பா உங்கள் செயலை நாம் பின் தொடருவோம் என்பது உறுதி

சந்திரபுரம்
மடடுவில் வடக்கு
(2605)

இப்படிக்கு
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், உறவினர்கள்

## மரண அறிவித்தல்

### திருமதி
### சொர்ணாம்பிகை பரந்தாமன்

திருமதி சொர்ணாம்பிகை பரந்தாமன் காலமானார் இவர் வீ. பரந்தாமன் [ஆசிரியர் ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை] அவர்களின் அன்பு மனைவியும், முல்லை, பொன்முடி, (மெதடிஸ்த பெண்கள் பாடசாலை பருத்தித்துறை) அந்தணன், புலவன் [ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை] ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 28-5 92 வியாழக்கிழமை நண்பகல் தமிழ் வளர் சோலை, புலோலி தெற்கு, பருத்தித்துறையில் நடைபெறும்.

தமிழ் வளர் சோலை,
புலோலி தெற்கு,
பருத்தித்துறை.

தகவல்
பண்டிதர் வீ. பரந்தாமன்

[சி/4471]